**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 27.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 8082/E/2018/X**

திரு வீ.பச்சமுத்து ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆண்டிமடம்,
அரியலூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 28.05.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 19.07.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 29.10.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு வீ.பச்சமுத்து ஆஜராகவில்லை. மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்திற்கு 19.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக வயது முதிர்வின் காரணமாக உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வெளியூர் பயணம் செய்ய முடியாத நிலையில் ஆணையத்தின் விசாரணைக்கு தற்போது ஆஜராக இயலவில்லையென்றும், இவ்வழக்கின் விசாரணையை 2 மாத காலத்திற்கு பிறகு பிறிதொரு தேதிக்கு ஒத்திவைக்குமாறும்

தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு அ.சம்பத், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் (பொ), ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 28,05.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், அய்யூர் கிராம எண்.9 எல்லைக்குட்பட்டு, அதிலுள்ள சர்வே எண்கள் மற்றும் உட்பிரிவுகள் 263/6, 263/6A, 263/6B ஆகியவற்றின் 01.01.1960 முதல் 01.01.2018 வரை “அ” பதிவேட்டின்படி நில உடைமைதாரரின் பெயர், பட்டா எண்., விஸ்தீரணத்தின் மொத்த பரப்பளவு, FMB SKETCH நகல், சர்வே எண். உட்பிரிவு எண். 263/6B-ல் உள்ள பட்டா எண்.826-ல் திருத்தங்கள் செய்ய விண்ணப்பங்கள் வந்திருப்பின் விண்ணப்பம் செய்தவர்களின் முழு விபரம் மற்றும் அதன் நகல், பட்டா எண்.826-ல் 01.01.2018 முதல் 01.05.2018 வரை உட்பட்ட நாட்களில் “அ” பதிவேட்டில் திருத்தங்கள் இருப்பின் அதன் உத்திரவின் நகல், 01.01.2018-ற்குப் பின்பு பட்டா எண்.826-ல் உட்புல எண்.263/6B-ல் திருத்தங்கள் ஏற்பட்டிருப்பின் அதன் உத்திரவு நகல், பட்டா எண்.826-ல் உள்ள பட்டா உடைமைதாரருக்கு அறிவிப்பு நேட்டீஸ் கொடுத்திருப்பின் அதன் முழு விபரம் என 6 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 20.06.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேற்படி நகல்களைப் பெற உரிய கட்டணத்துடன் விண்ணப்பம் செய்து அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள நில அளவைப் பதிவேடுகள் துறையில் பெற்றுக் கொள்ளலாமெனப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 19.07.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை வருவாய் கோட்டாட்சியர், உடையார்பாளையம், அரியலூர் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 25.09.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 29.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 25.09.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக அவர் கோரிய தகவலனைத்தும் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார்.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்த ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் வழங்கப்படவேண்டுமென்றும் ஆணையம் தீர்மானித்து. விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **மேல்முறையீட்டாளர் ஒரு மூத்த குடிமகன் என்பதால் 28.05.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவல் தொடர்பாக தங்களது அலுவலகத்தில் இருக்கும் தகவலையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருக்கும் தகவலைப் பெற்றும் முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

2. **மேல்முறையீட்டாளர் 28.05.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத, சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்கீழ் ஏன் அதிகபட்ச அபராதம் ரூ.25,000/- விதிக்கலாகாது என்பதற்கு உரிய விளக்கத்தையும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(2)-ன்கீழ் ஏன் துறைரீதியான நடவடிக்கைக்கு உயரதிகாரிகளுக்குப் பரிந்துரைக்கக்கூடாது என்பதற்குரிய விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் சம்பந்தப்பட்டவர்களிடம் பெற்று ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 8082/E/2018/X</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆண்டிமடம்,
அரியலூர் மாவட்டம்.

**மனுதாரர்**

திரு வீ.பச்சமுத்து,
க.எண்.598, மேற்குத் தெரு,
காங்குழி கிராமம்,
அய்யூர் (அஞ்சல்),
ஆண்டிமடம் வட்டம்,
அரியலூர் மாவட்டம் - 608 901.

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*